திருப்பூர் மத்திய மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

மாவட்டச்செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக்கூட்டணியையும் கண்டித்து மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் தெற்கு மற்றும் பல்லடம் சட்டமன்ற தொகுதிகளில் மதசார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 'மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்' கீழ்கண்ட இடங்களில் நடைபெற உள்ளது.

திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி

பகுதி / ஒன்றியம்	ஆர்பாட்டம் நடைபெறும் இடம்	தலைமை / முன்னிலை
வாலிபாளையம் பகுதி	அண்ணா பெரியார் சிலை	தலைமை திரு. க. செல்வராஜ் MLA மாவட்ட கழக செயாலளர் திரு. TKT மு. நாகராசன் மாநகர கழக செயலாளர் திரு. P.R. செந்தில்குமார் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. P. பரமேஸ்வரி திருமதி. M. கலாவதி
கொங்கணகிரி பகுதி	காலேஜ் ரோடு சாதிக் பாட்சா நகர்	தலைமை திரு. க. ஈஸ்வரமூர்த்தி பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. க. மகாலட்சுமி மாநகர துணை செயலாளர் திருமதி. R. சுமதி
தென்னம்பாளையம் பகுதி	வெள்ளியங்காடு நால் ரோடு	தலைமை திரு. மு. நந்தகோபால் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. மல்லிகா திருமதி. வடிவு
நல்லூர் பகுதி	நல்லூர் பேருந்து நிறுத்தம்	தலைமை திரு. மேங்கோ அ. பழனிசாமி பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. ஆனந்தி மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி. ஈஸ்வரி திருமதி. லட்சுமி
கருவம்பாளையம் பகுதி	செல்லம் நகர் பிரிவு	தலைமை திரு. மியாமி. ஆ. அய்யப்பன் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. சுகாசினி திருமதி. ஆனந்தி
பெரிச்சிபாளையம் பகுதி	தாராபுரம் ரோடு புதூர் பிரிவு	தலைமை திரு. தம்பி. ப. குமாரசாமி பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. நந்தினி மாவட்ட துணைச்செயலாளர் திருமதி. லட்சுமி திருமதி. பூங்கொடி திருமதி. சாந்தி
பெரியகடை வீதி பகுதி	C.T.C. கார்னர்	தலைமை திரு. மு.க. உசேன் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. மும்தாஜ் திருமதி. கமலா

பல்லடம் சட்டமன்றத் தொகுதி

ஆண்டிபாளையம் பகுதி	ஆண்டிபாளையம் பிரிவு	தலைமை திரு. ப. முருகேசன் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. ப. கலைச்செல்வி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. மேகலா திருமதி. சுலோச்சனா
வீரபாண்டி பகுதி	வீரபாண்டி ரவுண்டானா	தலைமை திரு. கோவிந்தராஜ் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. வைஜெயந்தி திருமதி. மோகனசுந்தரி
முத்தனம்பாளையம் பகுதி	கோவில்வழி பேருந்து நிறுத்தம்	தலைமை திரு. S.N. குமார் பகுதி கழக பொறுப்பாளர் திருமதி. சித்ரா திருமதி. கனிமொழி
பல்லடம் கிழக்கு ஒன்றியம்	அறிவொளி நகர்	தலைமை திரு. நா. சோமசுந்தரம் ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. ஜெயந்தி
பல்லடம் மேற்கு ஒன்றியம்	வடுகபாளையம் நால் ரோடு	தலைமை திரு. சு. கிருஷ்ணமூர்த்தி ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. ராஜேஸ்வரி
பல்லடம் தெற்கு ஒன்றியம்	காரணம்பேட்டை	தலைமை திரு. ந. துரைமுருகன் திருமதி. பானுமதி
பல்லடம் வடக்கு ஒன்றியம்	கரைபுதூர் (அருள்புரம்)	தலைமை திரு. வழக்கறிஞர் S. குமார் மாவட்ட துணைச்செயலாளர் திரு. கே.பி. சீனிவாசன் ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. பிரியங்கா முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. மஞ்சுளா திருமதி. சுமித்ரா திருமதி. மேனகா துரைசாமி
பொங்கலூர் கிழக்கு ஒன்றியம்	கொடுவாய்	தலைமை திரு. சா. பாலுசாமி ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. வனிதா
பொங்கலூர் மேற்கு ஒன்றியம்	P.K. பாளையம் நால் ரோடு	தலைமை திரு. ப.கு. கனகராஜ் ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. பூங்கொடி
பொங்கலூர் வடக்கு ஒன்றியம்	கள்ளிப்பாளையம்	தலைமை திரு. பெ. அசோகன் ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. சுப்புலட்சுமி
பொங்கலூர் தெற்கு ஒன்றியம்	காட்டூர்	தலைமை திரு. ரா. சிவாச்சலம் ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. மரகதம்
திருப்பூர் தெற்கு ஒன்றியம்	மங்கலம்	தலைமை திரு. விஸ்வலிங்கசாமி ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமதி. அலிமாதாய் திருமதி. யசோதா
பல்லடம் நகரம்	கொசவம்பாளையம் ரோடு	தலைமை திரு. நா. ராஜேந்திரகுமார் நகர கழக செயலாளர் திருமதி. வைஜெயந்தி திருமதி. மோகனசுந்தரி

எனவே, கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ள மேற்கண்ட மாநகர – ஒன்றிய – நகர – பகுதி – பேரூர்களில் அந்தந்த மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் தி.மு.க. செயலாளர் அனைவரும் ஒன்றிணைந்து இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான துண்டறிக்கையை முறையாக அச்சிட்டு, அந்தந்த மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இடம் பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கு முறையாக அழைப்பிதழை தந்து கூட்டணிக் கட்சியாளர்கள் அனைவரும் ஆங்காங்கு நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்று இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் வெற்றிகரமாக நடத்தி தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

க.செல்வராஜ் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் – திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு.க.

திருப்பெரும்புதூர் தண்டலம் ராஜலட்சுமி கல்லூரியில் நேற்று (14.3.2026) விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். நிகழ்ச்சி ஏற்பாடு எம்.அரசு ஐ.சி.எப். செய்திருந்தார். உடன் ஒன்றிய செயலாளர் கோபால் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் பால்ராஜ் ,மனோஜ், செந்தில் தேவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை பள்ளி மாணவர்களுக்கான கால்பந்து பயிற்சித் திட்டத்தின் கீழ்

பயிற்சி பெற்ற 70 மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்கள்!

மேயர் திருமதி ஆர்.பிரியா வழங்கிப் பாராட்டினார்!

சென்னை,மார்ச்.15- நேற்று (14.03.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா , பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஆஸ்திரேலியா துணைத் தூதரகம் இணைந்து சென்னை பள்ளி மாணவர்களுக்கான கால்பந்து பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாணவ, மாணவியருக்கு சான்றிதழ் களை ரிப்பன் கட்டட வளாகத் தில் உள்ள கூட்டரங்கில் வழங் கினார்.

இந்நிகழ்வில் மேயர் தெரி வித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுத லின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு இருந்தா லும், கல்வித்துறைக்கென்று அதிக நிதி ஒதுக்கீடு செய்து, மாணவர்கள் கல்வியினை சிறப்பாகவும், ஆர்வமுடனும் கற்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாணவர்கள் கல் வியுடன் விளையாட்டுகளிலும் அதிக ஆர்வம் காட்டும் வகை யில் மாணவர்களுக்கு விளை யாட்டு உபகரணங்கள், பல் வேறு விளையாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வரு கிறது.

இவ்வாறாக, சிறப்பு திட் டங்கள் துறை மூலமாக சென்னை பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உலகதரம் வாய்ந்த கால்பந்து பயிற்சி யினை வழங்கிடும் வகையில் 202526ஆம் நிதியாண்டில் ஆஸ் திரேலியா துணைத் தூதரகத்தின் மூலம் திருமலை அறக்கட்டளையின் Great Goals நிறுவனத்தின் சார்பில் சென்னை பள்ளிகளில் கால் பந்து பயிற்சி திட்டம் சிறப் பாக வழங்கப்பட்டது. சென்னை பள்ளிகளின் உட் கட்டமைப்பு, டிஜிட்டல் உட் கட்டமைப்பு, கற்பித்தல் முறை, ஆசிரியர் பயிற்சி, விளையாட்டு மற்றும் பாடத் திட்டத்திற்கு இணையான செயல்பாடுகள் ஆகியவற்றில் முழுமை பெற்ற பள்ளிகளாக மாற்றும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை ஸ்மார்ட் சிட்டி மற் றும் சென்னை பள்ளிகள் ஆகி யவை இணைந்து இச்சிறப்பு திட்டத்தை செயல்படுத்தியுள் ளது.

தமிழ்நாடு துணை முதல மைச்சர் 202526ஆம் கல்வி யாண்டில் நியூ மார்க்கெட் மற் றும் கோட்டூர் சென்னை மேல்நிலைப் பள்ளிகள் சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளில் கால் பந்து பயிற்சியினை தொடங்கி வைத்தார். இம்மாணவர்க ளுக்கு மண்டல அளவில் சென்னை பள்ளிகளுக்கு இடையில் பயிற்சிகள் வழங் கப்பட்டது

இப்பயிற்சியின் போது மாணவர்களுக்கு திறன் பயிற்சி, உடல் தகுதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை வலி யுறுத்தும் வகையில் வாரம் இரு முறை தகுதி வாய்ந்த பயிற்றுந கர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டதுடன், மாண வர்களுக்கு GCC முத்திரையிடப்பட்ட டிசர்டுகள், காலணிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதில் பயிற்சி பெற்ற நியூ மார்க்கெட்சென்னை உயர்நி லைப் பள்ளியைச் சார்ந்த 20 மாணவர்களும், கோட்டூர் சென்னை உயர்நிலைப் பள்ளி யைச் சார்ந்த 20 மாணவர்க ளும், சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நி லைப்பள்ளியைச் சார்ந்த 30 மாணவர்கள் என மொத்தம் 70 மாணவர்கள் மண்டல அள வில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் இறுதிச் சுற்றுக்கு தேர்ச்சி பெற் றனர்.

இப்பயிற்சியில் வெற்றிகர மாக முடித்த சென்னை பள்ளி களைச் சார்ந்த 70 மாணவர்க ளுக்கு இன்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, ஆஸ் திரேலிய தூதகரகத்துடன் இணைந்து, சென்னை பள்ளி மாணவர்களின் விளையாட்டுத் திறன் மற்றும் ஆர்வத்தை அதிகரிக்கும் வகை யில் கால்பந்து பயிற்சித் திட் டம் சிறப்பாக வழங்கப்பட் டது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., நிலைக்கு முத் தலைவர் (கல்வி) பால வாக்கம் த. விசுவநாதன், ஆஸ் திரேலிய துணைத் தூதரக துணை உயர் ஆணையர் திரு மதி சிலை ஜக்கி (Mrs. Silai Zaki), திருமலை அறக்கட்டளையின் Great Goals நிறுவனர் திருமதி பிரியா கோபால், துணை நிறு வனர் திருமதி சந்தியா ராஜன், கல்வி அலுவலர் திருமதி ஜெ. வசந்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை சார்பில்

திருவொற்றியூரில் சமுதாய வளைகாப்பு விழா!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 15-

சமூக நலன் மற்றும் மக ளிர் உரிமைத்துறை ஒருங்கி ணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் திருவொற்றியூரில் சமுதாய வளைகாப்பு விழா ஸ்ரீ சாய் மகாலில் சிறப்பாக நடை பெற்றது.

திருவொற்றியூர் சட்ட மன்ற உறுப்பினர் கே.பி.சங் கர் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.அருணா அனைவரை யும் வரவேற்றார்.

ஆகாஷ் மருத்துவமனை யின் உரிமையாளர் மருத்து வர் ஏ.செல்வராஜ் குமார் கலந்துகொண்டு பொது மருத்துவம் குறித்து ஆலோச னைகள் வழங்கி வாழ்த்தி னார்.

மருத்துவர் பிரியா செல்வ ராஜ் குமார் கலந்துகொண்டு பெண்களின் மகப்பேறு காலம் குறித்தும், மகப்பேறு காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறைகள், உடற்பயிற்சி குறித்து ஆலோ சனை வழங்கினார்.

குழந்தைகள் நல மருத்து வர் டாக்கடர் கா.பிரவீன் கலந்து கொண்டு குழந்தைகள் பராமரிப்பு குறித்தும், தாய்ப் பாலின் அவசியத்தையும் எடுத்துரைத்தார் .

திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தனது துணைவி யார் கஸ்தூரி சங்கர் அவர்க ளுடன் கலந்து கொண்டு திரா விட மாடல் அரசு பெண்களுக்கு செய்து வரும் நலத்திட்டங்களை எடுத்து ரைத்து, தங்களின் குடும்பத் தில் ஒருவனாக இருந்து இப் படிப்பட்ட ஒரு சமத்துவ வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்த வாய்ப்பு வழங்கியதை பெறுமையாக கருதுவதாக தெரிவித்தார்.

மேலும் அனைவரும் நல்ல முறையில் குழந்தை பெற்றெ டுக்க வேண்டும் என்று மாநில மீனவர் அணி துணைத் தலை வர் திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வாழ்த்தி மகிழ்ந் தார். நிகழ்ச்சிக்காக உழைத்த அனைத்து அங்கன்வாடி பணி யாளர்களுக்கும் நன்றியை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இறுதியாக 5வது வட்டக் கழக செயலா ளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி உரையாற்றினார்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

தியாகராயர் நகர் கிழக்கு பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, மார்ச். 15

தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணி யையும் கண்டித்து மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்ட ணிக் கட்சிகளின் சார்பில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை. அடுப்பு எரிப்பதற்கு கேஸ் சிலிண்டரும் இல்லை என்ற அவல நிலை தொடர்ந்து வருகிறது. இதனை உடனே சரி செய்யக்கோரி கழகத் தலைவர், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஒன்றிய அரசின் பிரதமருக்கு கடிதம் எழுதியும் எள் முனையளவும் நடவடிக்கை எடுக்கவில்லை. தமிழ்நாட் டுக்கு நிதியும் இல்லை. தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதி எந்தத் திட்டங் களும் இல்லை. எல்லா வகையிலும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை யும், அதன் தவறான வெளி யுறவு கொள்கையையும் கண்டித்து மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம் சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதியில் சட் டமன்ற உறுப்பினர், பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கரு ணாநிதி தலைமையில் இன்று (15.03.2026 ஞாயிற் றுக்கிழமை) காலை 10 மணி அளவில், தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலை (தியா கராயர் நகர் பேருந்து நிலை யம் அருகில்) தியாகராயர் நகர் கிழக்கு பகுதி மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம், நடை பெற உள்ளது.

எனவே தொகுதிப் பார் வையாளர், மாநில நிர்வாகி கள், செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகி கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் கள் மற்றும் துணை அமைப் பாளர்கள் மாவட்டப் பிரதி நிதிகள், கழக முன்னாள் கழக உறுப்பினர்கள் அனை வரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்புக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.